# KPR IAS Academy

Institute for IAS, IPS, IFS and TNPSC Exams

Learn Beyond

No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001






# எகிப்தில் தமிழ் கல்வெட்டுகள்!

முனைவர் சீனிவாச கண்ணன்

தொல்காப்பியத்துக்குப் பாயிரம் வகுத்த பனம்பாரனார்,'வடவேங்கடம்தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறுநல் லுலகம்' என்று பழந்தமிழ் நாட்டின் எல்லையைக் குறிக்கின்றார். அதையே தமிழ் இலக்கிய வரலாற்றில் 'லெமூரியாக் கண்டம்' என்பர். இவ்வாறு குறிப்பிடப் பெற்றுள்ள குமரி முனைக்குத் தெற்கே இருந்த பெரும் நிலப் பரப்பைக் கடல் கோள் (சுனாமி) தன்னகத்தே கொண்டு விழுங்கிவிட்டது என்பர் ஆய்வாளர்கள்.

ஸ்காட் எலியட் என்பவர், 'தமிழ்நாடு லெமூரியாவில் இருந்தபோது எகிப்து நாடு நீருள் இருந்தது' என்கிறார். எனவே, எகிப்து தோன்றுவதற்கு முன்பே தமிழகம் தோன்றியிருக்க வேண்டும்.

எகிப்தின் தற்போதைய லக்ஸர் நகருக்கு அருகில் நைல் நதிக்கு மேற்குப் பகுதியில் அமைந்திருக்கிறது 'மன்னர்களின் பள்ளத்தாக்குப் பகுதி', 'பழங்கால எகிப்தின் புதிய ராஜாங்கத்தைச் சேர்ந்த (கி.மு.16 முதல் கி.மு. 11-ஆம் நூற்றாண்டு வரை) 'ஃபாரோக்கள்', அவர்களுடைய பிரபுகளுக்காக உருவாக்கப்பட்ட 65 கல்லறைகள் இங்கே உள்ளன.

ரோமானியர்களின் காலத்தில் இந்தப் பகுதிகளுக்கு வந்தவர்கள் தங்களுடைய பெயரைக் கல்லறைச் சுவர்களில் எழுதிச் சென்றிருக்கக் கூடும். லோசான் பல்கலைக்கழகம் - இங்கோ ஸ்டராச்சும், தூர கிழக்கு ஆய்வுகளுக்கான பிரெஞ்சு நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் சார்லஸ் சுமித்தும் - மன்னர்களின் பள்ளத்தாக்கில் உள்ள ஆறு கல்லறைகளில் இந்திய மொழிகளின் சுமார் 80 எழுத்துப் பொறிப்புகளைக் கண்டறிந்தனர்.

தற்போது நடந்த ஆய்வில் 1,2 ,6,8,9,14 என்று இலக்கமிடப்பட்டுள்ள ஆறு கல்லறைகளில் 30 இந்திய எழுத்துப் பொறிப்புகள் கிடைத்துள்ளன. தமிழ், பிராகிருதம், காந்தாரி, சம்ஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளில் இந்த எழுத்துப் பொறிப்புகள் கிடைத்துள்ளன. இந்த மொழிகளில் எழுத மூன்று விதமான எழுத்துவடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. காந்தாரி மொழியை எழுத கரோஷ்டி என்ற எழுத்து வடிவமும், பிராகிருதம் மற்றும் சம்ஸ்கிருதத்தை எழுத பிராமி எழுத்துகளும், தமிழை எழுத தமிழ் பிராமியும் (தமிழி) பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கல்லறைகளில் கிடைத்த பெரும்பாலான எழுத்துப் பொறிப்புகள் தமிழைச் சார்ந்ததாகவே இருந்தன. முதலாம் எண் கல்லறையில் கிடைத்துள்ள 16 எழுத்துப் பொறிப்புகளில் பாதிக்கும் மேற்பட்டவை தமிழில் இருந்தன. இங்குள்ள பல கல்லறைகளில் கிடைக்கும் தமிழ் எழுத்துப் பொறிப்புகளில் 'சிகை கொற்றன்' என்ற வார்த்தை அதிக அளவில் காணப்படுகிறது. இந்தப் பெயர் எட்டு இடங்களில் காணப்படுகிறது.

முதலாவது கல்லறையில் 'சிகை கொற்றன் வந்தான், பார்த்தான்' என மூன்று முறை எழுதப்பட்டிருக்கிறது. கல்லறையின் நுழைவாயில் பகுதியில், எதிர் எதிராக இரண்டு இடங்களில் இந்த வார்த்தைகள் காணப்படுகின்றன. இரண்டாவது கல்லறையில் சிகை கொற்றன் என்ற பெயர் உள்ளது. ஆறாவது கல்லறையில் இரண்டு எழுத்துப் பொறிப்புகள் கிடைக்கின்றன. நுழை வாயிலுக்கு அருகில் இருக்கும் சுவரில் உயரத்தில் இவை எழுதப்பட்டிருக்கின்றன.

இதிலும் ஒன்று 'சிகைக் கொற்றன்' எழுதியதாக அறியப்படுகிறது. இந்தக் கல்லறையில் கிரேக்க எழுத்துகள் உள்ளே எழுதப்பட்டிருந்தாலும் அந்த அளவு உயரத்தில் வேறு யாரும் எழுத்துப் பொறிப்புகளைச் செய்யவில்லை. எட்டாவது கல்லறையில் கிடைக்கும் ஆறு எழுத்துப் பொறிப்புகளில், நான்கு தமிழில் உள்ளன. ஒன்பதாவது கல்லறையின் நுழைவாயில் பகுதியில், தமிழில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. 14-ஆவது கல்லறையில் தமிழ் மொழியில் 'சிகைக் கொற்றன்' என்ற எழுத்துப் பொறிப்பு மட்டும் காணப்படுகிறது.

'சிகைக் கொற்றன் வரும் போது/வந்ததால்/வந்து விட்டதால் பார்த்து விட்டான்' என்ற பொறிப்புக் காணப்படுகிறது. ஏற்கெனவே உள்ள கிரேக்க எழுத்துப் பொறிப்புகளுக்கு மேலே இருக்கும் வகையில் சிகை கொற்றன் தமிழ் எழுத்துகளைப் பொறித்திருக்கலாம். சிகை கொற்றன் தவிர, கோபன், வரத கண்டன், சாத்தன், கீரன் போன்ற பெயர்களும் காணக் கிடைக்கின்றன.

தமிழர்கள் தங்கள் கடல் செலவின்போது தத்தம் வழிபாட்டு முறைகளையும், குறியீடுகளையும், தாங்கள் சென்ற இடங்களில் காலூன்றச் செய்திருக்கலாம். 1931-ஆம் ஆண்டில் 'மிஸ்ஸிங் லிங்க்ஸ்' எனும் ஆங்கில வரலாற்று நூலை வடுவூர் கே.துரைசாமி அய்யங்கார் (நாவலாசிரியரும் கூட) வெளியிட்டார். அந்நூலில் பல்வேறு தலைப்புகளில் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார்.

எகிப்தில் உள்ள 'மன்னர்களின் பள்ளத்தாக்கில்' உள்ள பிரமிடுகளில் உள்ள 'மம்மிகளில்' வைணவ சமயக் குறியீடுகள் காணப்படுகின்றன என்று புகைப்படச் சான்றுகளுடன் வெளியிட்டுள்ளார்.

# தில்லியில் பயங்கரவாத தாக்குதல் அச்சுறுத்தல்: பாதுகாப்பு ஏற்பாடுகள் பன்மடங்கு அதிகரிப்பு

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, மே 9:** தலைநகர் தில்லியில் பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக அனைத்து பகுதிகளும் முழு உஷார் நிலையில் உள்ளன. கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து நகர காவல்துறையின் உயரதிகாரி சனிக்கிழமை கூறியதாவது: தில்லிக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் இருக்கலாம் என கிடைத்த உளவுத் தகவல்களையடுத்து தொடர்ந்து, நகர் முழுவதும் உயர் எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தில்லி காவல்துறை மற்றும் மத்திய துணை ராணுவப் படைகளுடன் சேர்ந்து முக்கிய இடங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தீன தயாள் உபாத்யாய மார்க்கில் உள்ள பாரதிய ஜனதா கட்சி (பாஜக) தலைமையகம், அதனருகே உள்ள அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் வழக்கமாக நிறுத்தப்பட்டுள்ள படையினருடன் சேர்த்து கூடுதலாக ஆயுதமேந்திய காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். அப்பகுதிகளில் கூடுதலாக தடுப்புகளும் போடப்பட்டு வாகன தணிக்கை மற்றும் கண்காணிப்புக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல, சட்டம் - ஒழுங்கு கண்ணோட்டத்தில் எளிதில் இலக்குக்கு ஆளாகக் கூடிய குடியிருப்புகள் மற்றும் மக்கள் வசிப்பிடங்களிலும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளூர் காவல்துறை திடீர் சோதனைகளையும் விடுதிகளில் தங்கியுள்ளோரின் அடையாள சரிபார்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

மத்திய தில்லியில் உள்ள முக்கிய அரசு அலுவலகங்கள் மற்றும் மக்கள் கூடும் பகுதிகளில் தற்கொலைத் தாக்குதல்கள், வாகனங்களில் பொருத்தப்பட்ட வெடிகுண்டுகள், துப்பாக்கிச் சூடுகள் மற்றும் ஒருங்கிணைந்த தாக்குதல்கள் நடத்தப்படலாம் என எச்சரிக்கை வந்துள்ளதால் தலைநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

'முக்கிய அரசியல் கட்சி அலுவலகங்கள், முக்கிய பிரமுகர்கள் வசிக்கும் வீடுகள், அலுவலகங்களில் வெடிகுண்டு செயலிழப்பு குழுக்களைக் கொண்டு காலையிலும் மாலையிலும் சோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்துடன் மோப்ப நாய் பிரிவுகள் மற்றும் தில்லி தீயணைப்புத் துறை உள்ளிட்டவை விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கு இடமான நடமாட்டங்கள், உரிமையாளர் இல்லாத பொருள்கள் மற்றும் பதற்றமான பகுதிகளில் நீண்ட நேரமாக நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் மீது கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது' என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

# வேலைவாய்ப்பின்மை நாட்டின் மிகப் பெரிய நோய்: ராகுல்

**புது தில்லி, மே 9:** 'வேலைவாய்ப்பின்மை நாட்டின் மிகப் பெரிய நோய்' என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்தார்.



மேலும், 'வேலையில்லா இளைஞர்களுக்கான பாஜகவின் பதில் தடியடி' என்றும் அவர் விமர்சித்தார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் அவர் சனிக்கிழமை வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

நாட்டின் வேலைவாய்ப்பின்மையின் தாக்கம் பிகார் மற்றும் உத்தர பிரதேச இளைஞர்கள் மீது விழுந்துள்ளது. வேலைவாய்ப்பு உரிமை கோரி தெருக்களில் போராட்டங்களில் ஈடுபட்ட இளைஞர்களை போலீஸார் கடுமையான தடியடி நடத்தி கலைத்துள்ளனர்.

குறிப்பாக, பிகார் தலைநகர் பாட்னாவில், ஆசிரியர் பணிக்காக காத்திருப்பவர்கள் அமைதி வழியில் வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்திய நிலையில், அவர்கள் மீது பிகார் போலீஸார் கடுமையான தடியடியை மீண்டும் நடத்தியுள்ளனர். அந்த வகையில், வேலையில்லா இளைஞர்களுக்கான பாஜகவின் பதில் தடியடிதான்.

வேலைவாய்ப்பின்மை இந்தியாவில் மிகப் பெரிய நோயாக உள்ளது. பட்டப் படிப்பு முடித்த மற்றும் பல்வேறு தொழில் திறன்களைப் பெற்ற இளைஞர்கள் வேலை தேடி அலையும் நிலை நீடித்து வருகிறது. ஆனால், இதுகுறித்து பாஜக அரசு கண்டுகொள்வதே இல்லை. அதே நேரம், தங்களின் வேலைவாய்ப்பு உரிமையைக் கோரி சாலையில் போராடும் இளைஞர்களுக்கு வேலையைக் கொடுக்காமல், தடியடியை பரிசாக பாஜக அரசு கொடுக்கிறது.

பாஜகவின் பொய்களைக் கேட்டு இளைஞர்கள் சலித்துவிட்டனர். இனியும் அவர்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள். இவர்களுக்கு அனைத்து வகையிலும் காங்கிரஸ் துணை நிற்கும் என்று குறிப்பிட்டார்.

பிகார் அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் நடத்தப்பட உள்ள ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான தேதியை விரைந்து அறிவிக்கை செய்ய வலியுறுத்தி ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற பட்டதாரிகள் பாட்னாவில் வெள்ளிக்கிழமை இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர், அவர்கள் கண்டனப் பேரணியை நடத்த முற்பட்டனர். அப்போது அவர்களைத் தடுத்து நிறுத்திய போலீஸார், அவர்களைத் தடியடி நடத்தி கலைத்தனர். இதில் பலர் காயமடைந்தனர்.